# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

### ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தல் திட்டம்

# திட்டப் பணியாளர்களை ஆட்சேர்த்தல்

# முகாமைத்துவ உதவியாளர் (MA)

ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தும் (PHSEP) திட்டமானது உலக வங்கியினால் (WB) நிதியிடப்படும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் மொத்த செயற்றிட்ட செலவு 150 மில்லியின் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் 2024-2028ஆம் காலப்பகுதியில் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் (PMU) ஒப்பந்த அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர் பதவியை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கும், திருப்திகரமான செயல்திறன் மற்றும் திட்டத்தின் தேவைப்பாடு அடிப்படையில் 2028.12.31ஆம் திகதி முடிவடையும் அதிகபட்ச ஈடுபாட்டுக் காலம் வரை வருடாந்தம் நீடிக்கப்படக் கூடியது. சம்பளம், அனுபவம் மற்றும் தகைமைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2026 பெப்ரவரி 02ஆம் திகதிய 01/2026ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3.2.3 பந்தியின் அடிப்படையில் இருக்கும்.

| பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | தகைமைகள் |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர்<br><br>(முழு நேரம்) | 02 | **வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**<br>• க.பொ.த. (உ/த) - 03 பாடங்கள்<br>• க.பொ.த. (சா/த) - சிங்களம்/தமிழ், ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் உட்பட 04 பாடங்களில் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>**உள்வாரி விண்ணப்பதாரிகள் (அரசாங்க சேவை):**<br>• மேற்கூறிய உ/த மற்றும் சா/த தகைமைகள்<br>• நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருடகால திருப்திகரமான சேவை<br>• திணைக்களத் தலைவரின் பரிந்துரை |
| | | **அனுபவம்:**<br>அலுவலக நிர்வாகம் / கணக்கு / பெறுகை / திட்ட முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய துறையில் 02 வருடகால அனுபவம் விரும்பத்தக்கது. அரச அல்லது நன்கொடைத் திட்டங்களில் உள்ள அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.<br>**ஏனைய தேவைப்பாடுகள்:**<br>கணனி ஆற்றல் (MS Office), பொதுவான IT பிரயோகங்கள், சிறந்த தொடர்பாடல் திறன்கள் (சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கிலம்), குழுவில் வேலை செய்யும் ஆற்றல், சிறந்த குணம் மற்றும் உடல் மற்றும் உள தகுதிகள். |

செயற்றிட்ட தகவல்களுக்கு தயவு செய்து https://phsep.lk இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

விபரமான அல்லது சுய தரவுகளுடன் (குறிப்பிட்ட வடிவம் இல்லை) கல்வி, அனுபவம் மற்றும் ஏனைய தகைமைச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம் / மின்னஞ்சல் முகவரி சகிதமான விண்ணப்பங்களை ''முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனத் தலைப்பிட்டு 2026 மார்ச் 06ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.

**முகவரி:**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டம்**
**191 ஏ, "The Bungalow"**
**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**தர்மபால மாவத்தை, கொழும்பு -07**
**மின்னஞ்சல்: info@phsep.lk**
**தொலைபேசி: 011 2271150**

தேவையான தகைமைகள், அனுபவம், திறன் மற்றும் திறமைகளைக் கொண்டிராத, தாமதமான, முழுமையற்ற, ஆதரவு ஆவணங்கள் இணைக்கப்படாத, பதிவுத் தபால் அல்லாத வேறு முறைகளில் (மின்னஞ்சல், நேரடியாக ஒப்படைத்தல் அல்லது வேறேதாவது முகவரி) அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டம்**
2026 பெப்ரவரி 20.